புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992, 9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1, 7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421, 9488420449
neethiPress@gmail.com

மலர்: 01 ● இதழ்: 282 ● 17-04-2026 ● வெள்ளி ● பக்கம்- 4 ● விலை- ரூ.5 ● திருச்சி- புதுச்சேரி
Volume 01 ● Issue: 282 ● 17-04-2026 ● Friday ● Pages - 4 ● Price- Rs. 5 ● Trichy-Puducherry

## மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்க போகிறது

### நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி உரை

டெல்லி: ஏப்.17–

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நம் நாட்டிற்கு ஒருபுதிய திசையை காட்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறி இருக்கிறார். 131ஆவது சட்ட திருத்தம், தொகுதி மறுவரையறை மற்றும் இடஒதுக்கீடு மசோதாக் களை ஆதரித்து நாடாளு மன்ற மக்களவையில் பேசிய பிரதமர் மோடி, அதிமுக்கியத்துவம் வாய்ந்த மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்பதை தாம் பாக்கியமாக கருத்துவதாக கூறினார்.



இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட் டுள்ள 3 மசோதாக்களும் எனது அரசு, நாட்டின் வளர்ச்சியில் எவ்வளவு உறுதியாக இருக்கிறது என்பதை பறைசாற்றும். இன்று மசோதாக்களை எதிர்ப்பவர்கள் நாளை இதற்கான எதிர் வினையை சந்திப் பார்கள் என்றார். புதிய வரலாறு படைக்க நாடாளுமன்றத்திற்கு பொன்னனான நாள் என்றார். மகளிர் இடஒதுக்கீட்டை எதிர்த்த கட்சிகளை பெண்கள் தண்டித்து உள்ளனர். இன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் வரலாறு நம்மை நினைவு கொள்ளும்.

நம் நாட்டின் மக்கள் தொகையில் சரி பாதி உள்ளவர்களுக்கு உரிய பிரதிநித்துவம் வழங்கும் தருணம் இது. எனவே மசோதாக்களை அரசியல் பிரச்சனையாக பார்க்க வேண்டாம், , அரசியல் சாயம் பூச வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளுக்கு பிரதமர் மோடி வேண்டு கோள் விடுத்துள்ளார். இது ஒரு கட்சிக்கு மட்டுமே பெருமை கிடைக்கும் விவகாரம் அல்ல, நாட்டின் மக்கள் தொகையில் 50% உள்ளவர்கள் தாக்களுக் கான உரிமையை பெறுவதற்கான நேரம் வந்துவிட்டது. நாட்டை கட்டமைப்பதில் இனி பெண்களின் பங்கு அதிகம் இருக்கும். மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை எதிர்ப்போரை காலம் ஒருபோதும் மன்னிக் காது. 30 ஆண்டுகளில் ஏராளமான பெண்கள் தலைவர்களாகி உள்ளனர். மகளிர் இட ஒதுக்கீடு மசோதா என்பது காலத்தின் கட்டாயமாகும். முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பெண்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு உள்ள நிலையில், நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு உரிய இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். தற்போது அனைத்து துறைகளிலும் பெண்கள் முன்னணியில் உள்ளனர் என்றார். பெண்கள் முன்னேற்றத் திற்கான வாய்ப்புகளை தடுக்க நாம் யார்.! பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு கிடைத்தால் நாடு மேலும் வலிமை பெறும்.

அரசியலமைப்பால் தான் நாட்டின் பிரதம ராக இன்று என்னால் நாடாளுமன்றத்தில் நிற்க முடிகிறது என்றார். தொடர்ந்து பேசிய பிரதமர் மோடி, எந்த மாநிலத்திற்கும் பாரபட்சம் காட்டப் படாது என்று உறுதியளிப்பதாக குறிப் பிட்டார். நாடாளு மன்றத்தில் தற்போதுள்ள மாநிலங்களின் விகிதாச்சார பிரதிநிதித்துவம் மகளிர் இட ஒதுக்கீட்டால் குறையாது என்று பேசினார். பிரதமர் பேசபேச எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்ட நிலையில், மேலும் தொகுதி மறுவரையறை மூலம் தென்மாநிலங்களுக்கு அநீதி இழைக்கப்படாது. தொகுதி மறுவரையறை குறித்து மாநிலங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்கம் அளிப்பார் என்றார் பிரதமர்.

## தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் போராட்டம்

நாமக்கல்: ஏப்.17–

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றியும், மசோதா நகலை தீயிட்டு எரித்தும் தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமை யிலான திமுகவினர் நாமக் கல்லில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா நிறைவேற்ற திட்டமிடப்பட்ட்டது. இதற்கு காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தமிழகத்தில் வீடுகள் தோறும் கருப்புக் கொடியேற்றி எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என திமுக தலைவர் முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்பேரில் மாநிலம் முழுவதும் திமுகவினர் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏந்தியும், வீடுகளின் முன் கருப்புக் கொடி கட்டியும்,



கோலமிட்டும் எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

இச்சூழலில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் சேலத்தில் இருந்து நாமக்கல்லுக்கு நேற்று முன்தினம் இரவு வந்தார். நாமக்கல் நல்லிபாளையத்தில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் முதல்வர் ஸ்டாலின் தங்கினார். தொடர்ந்து நேற்று காலை நாமக்கல் நல்லிபாளையத்திற்கு கருப்பு உடை அணிந்து முதல்வர் ஸ்டாலின் வந்தார். இதனையடுத்து அங்கு செல்லப்பன் என்பவரது வீட்டின் முன் உள்ள கொடிக் கம்பத்தில் தொகுதி மறுவரை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடியேற்றினார். மேலும், மசோதா நகலை தீயிட்டு எரித்தார்.

முன்னதாக தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், வெல்வோம் எனவும் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோஷம் எழுப்பப்பட்டது. தொடர்ந்து நாமக்கல் உழவர் சந்தைக்கு வந்த முதல்வர் ஸ்டாலின் அங்கு விவசாயிகள், மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது நாமக்கல் தொகுதி திமுக வேட்பாளர் ராணி, கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முதல்வர் ஸ்டாலின் பதிவு: தொடர்ந்து, இன்று நடைபெற்ற போராட்டம் குறித்து தமிழக முதல்வர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாடெங்கும் எதிர்ப்புத்தீ பரவட்டும், பாசிச பா.ஜ.க.வின் ஆணவம் வீழட்டும். அன்று, தமிழ் நாட்டில் பற்றத் தொடங்கிய இந்தி எதிர்ப்புத் தீ டெல்லியைச் சுட்டெரித்தது. டெல்லி பணிந்த பின்பே எங்கள் தீ தணிந்தது. இன்று, தமிழரைச் சொந்த நாட்டில் அகதிகளாக் கும் கருப்புச் சட்டத்தின் நகலை எரித்து மற்றுமொரு தீயினைப் பற்ற வைத்திருக்கிறேன்.

இத்தீயும் திராவிட நாடெங்கும் பரவும். பாஜக.வின் ஆணவத்தை அடக்கிக் காட்டும். "தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ" எனத் தெரிவித்துள்ளார்.

## வாக்குப்பதிவு, எண்ணிக்கையின்போது தடையற்ற மின் விநியோகம்

### அதிகாரிகளுக்கு மின்வாரியம் உத்தரவு

சென்னை: ஏப்.17–

வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போது தடையற்ற மின் விநியோகத்துக்கு நடவடிக்கை எடுக்கு மாறு அலுவலர்களுக்கு மின்வாரியம் உத்தரவிட் டுள்ளது.

தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு ஏப்.23ம் தேதியும், வாக்கு எண் ணிக்கை மே 4ம் தேதியும் நடைபெற உள்ளது. தேர் தலை நியாயமாகவும், அமைதியாகவும் நடத்த தேர்தல் ஆணையம் பல் வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பிரச்சாரங்கள் விறு விறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், இரவு நேரங்களில் அரசியல் கட்சியினர் செயற்கை யாக மின்தடையை ஏற் படுத்தி, வாக்குக்கு பணம் கொடுக்க முயற்சிப்பார் கள் என்பதால், அதை கவனமாக கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள் ளது.

இரவு நேரங்களில் எந்த இடத்திலும் மின் தடை ஏற்படக் கூடாது என அனைத்து பிரிவு அலுவலர்களுக்கும் மின் வாரியம் உத்தரவு பிறப் பித்துள்ளது. மேலும், வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையின் போது தடையற்ற மின்சா ரம் வழங்கவும் மின்வாரி யம் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மின் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: தேர்தல் அறிவிக்கப்படும் முன்பே அனைத்து பகுதிகளிலும் பராமரிப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. கோடையில் மின்சார பயன்பாடு, மின் பளு அதிகரிக்கும் என்பதால் பல இடங்களில் மின் கம் பிகள் மாற்றப்பட்டுள் ளன. இதர முன் னெச்சரிக்கை நடவடிக் கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வாக்குச் சாவடிகளை தயார் செய் யும் பணிகள் அடுத்த சில நாட்களில் தொடங்கும்.

இதையடுத்து, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வாக்குப் பதிவின் போது மின் தடை ஏற்படாமல் இருக்க உரிய முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும். மாற்று வசதிகளும் தயார்நிலை யில் வைக்கப்படும்.

வாக்குப்பதிவு இயந் திரங்கள் வைக்கும் 'ஸ்ட் ராங் ரூம்' மற்றும் வாக்கு எண்ணும் மையங்களில் மின்தடை ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாற்று ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள் ளன.

இரவு நேரங்களில் மின்தடை ஏற்படுவதை தடுக்க, அலுவலர்கள் நள் ளிரவு வரை பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள் ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## லால்குடியில் அனல் பறக்கும் பிரச்சாரம்: தாய்க்காக வாக்கு சேகரித்த மகன் ஜோஸ் சார்லஸ் மார்டின்

தமிழக சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு லால்குடி சட்டமன்றத் தொகுதி அஇஅதிமுக வேட்பாளர் லீமாரோஸ் மார்டின் அவர்களை ஆதரித்து லால்குடி தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் வேட்பாளர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இதன் ஒரு பகுதியாக, மாலை நடைபெற்ற பிரச்சாரத்தின் போது வேட்பாளர் லீமாரோஸ் மார்டின் அவர்களுக்கு ஆதர வாக, அவரது மகன் ஜோஸ் சார்லஸ் மார்டின் களமிறங் கினார்.



ஜோஸ் சார்லஸ் மார்டின் ஜங்கமராஜபுரம், மேட்டுப் பட்டி, அரியூர் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து "இரட்டை இலை" சின்னத்திற்கு ஆதரவு கோரினார்.

தனது தாயார் லீமாரோஸ் மார்டின் இந்தத் தொகுதி மக்களின் நலனுக்காகச் செயல்படுத்த உள்ள திட்டங்களை மக்களிடம் எடுத்துரைத்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இளைஞர்கள் மற்றும் பெண்களிடையே உற்சாகமாகப் பேசி வாக்கு சேகரித்த அவருக்கு, செல்லும் இடங்களில் எல்லாம் பொதுமக்கள் ஆர்வெத்துடன் வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து அவர் செய்தி யாளர்களிடம் பேசுகையில்:

லால்குடி தொகுதியில் அம்மாவின் எழுச்சி பிரம்மாண்டமாக உள்ளது . நாங்கள் அரசியலுக்கு சம்பாதிக்க வரவில்லை நல்லது செய்ய வந்துள்ளோம் . லால்குடி தொகுதி 20 வருடம் பின்தங்கி உள்ளது லால்குடி தொகுதி எம்எல்ஏ விற்கும் நேருவுக்குமே பல்வேறு பிரச்சனைகள் உள்ளன நேருவுக்கும் அவருக்கும் உள்ள பிரச்சனையில் தொகுதியை கவனிக்காமல் விட்டிருக் கின்றனர்.

அம்மா mla ஆனவுடன் eps ஆட்சி அமைத்தவுடன் கண்டிப்பாக தொகுதியில் மாற்றம் ஏற்படும்.

பாண்டிச்சேரியில் எங்கள் கூட்டணி ஆட்சி அமைத்தால் அமைச்சர் பதவி கேட்போம் அரசியல் வந்ததே சேவை செய்யத்தான் மந்திரி பதவி இருந்தால் தான் திறம்பட செயல்பட முடியும்

சிங்கப்பூர் போல மாற்றி காட்டுவோம் நம்மிடம் பல வசதிகள் உள்ளது லால்குடியை யும் சிங்கப்பூர் போல மாற்றி காட்டுவோம் என்றார்.

புதுச்சேரிக்கு சிறப்பு அந்தஸ்து வேண்டும் என்பது இரண்டாம் பட்சம் தான் மக்களின் வாழ்வாதாரம் உயர வேண்டும் , வேலைவாய்ப்பு ஊதிய உயர்வு , குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தீர்க்கப்படும்.

லால்குடியில் வெற்றி பெற்றால் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் திருச்சியை தொழில் மையமாக மாற்றி காட்டுவோம் .

துணை முதலமைச்சராக உள்ளவருக்கு தகுதி வேண்டும் தண்ணி அடித்துக் கொண்டும், தூங்கிக் கொண்டும், ஊர் சுற்றிக்கொண்டும், காதல் தோல்வியில் தற்கொலை முயற்சி மேற்கொள்வதும் தலைவர்களுக்கு தகுதி அல்ல தலைவர்கள் என்றால் மக்களை சந்திக்க வேண்டும் , அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் . இவர்கள் மக்களின் வாழ்வாதாரத்தை நிகழ்த்தாமல் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகின்றனர் .

இந்த குடும்பம் தான் ரியல் எஸ்டேட், டாஸ்மாக்கில் சரக்கில் கலக்கும் தண்ணீர் , ஊறுகாய் உள்ளிட்ட பல்வேறு தொழில்களை வாங்கி வைத்துள்ளனர்.

லால்குடி தொகுதியில் கடந்த காலங்களில் அதிமுக நேரடியாக களமிறங்கவில்லை அதனால் திமுக வெற்றி பெற்றது இம்முறை அதிமுக நேரடியாக இறங்குவதால் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என தெரிவித்தனர்.

## கோடை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ளதாக மாற்ற பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தல்

சென்னை: ஏப்.17–

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு கோடை விடுமுறை நாளை (ஏப். 17) முதல் வழங்கப்பட்டுள்ளது.

மீண்டும் பள்ளிகள் ஜூன் 1ம் தேதி திறக்கப்பட உள்ளன. எனவே இந்த விடுமுறை நாட்களில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். அதன் விவரம் வருமாறு: மாணவர்கள் விடுமுறை நாட்களில் கடல், ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகளில் குளிப்பதற்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டாம்.

கோடை வெப்பம் அதிகமாக இருப்பதால் வெளிப்புறவிளையாட்டுகளின் போது அதிகளவு தண்ணீரை அருந்தச் செய்யுங்கள். வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் வெளியே செல்வதையும், விளையாடுவதையும் தவிர்க்கவும்.

விடுமுறை நாட்களில் சில மாணவர்கள் தங்கள் உடல் மற்றும் மனநலனைப் பாதிக்கும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அதை சரியாகக் கையாள வேண்டும். டி.வி, செல்போன் ஆகியவற்றைப் பார்ப்பதில் அதிகமான நேரத்தை செலவிடுவதைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.

மாணவர்களின் வளர்ச்சிக்கு சமச்சீரான உணவு அளிப்பது அவசியம். எனவே பராம்பரிய உணவு வகைகளைத் தரவேண்டும். கோடை காலத்துக்கு ஏற்ற பழ வகைகளை வழங்க வேண்டும்.

இதுதவிர மாணவர்களை அருகில் உள்ள பொது நூலகங்களுக்கு அழைத்துச் சென்று ஒரு மணி நேரமாவது புத்தகங்களைப் படிக்க ஊக்குவிக்கவும்.

அவர்களின் ஆர்வங்களைப் பொருத்து காமிக்ஸ் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள், சிறார் கதைகள் மற்றும் நீதி நூல்களைப் படிக்க அறிவுறுத்த வேண்டும்.

இசை, நடனம், ஓவியம் போன்றவற்றில் ஆர்வமுள்ள மாணவர்களை விடுமுறை நாட்களில் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

தினமும் இருவேளை பல் துலக்கி, குளித்தல் போன்ற பழக்கங்களை ஊக்குவிக்க வேண்டும். பெரியோர்களை மதிக்கவும் அவர்களுக்கு உதவி செய்யவும் பழக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இபிஎஸ் சொந்த ஊரில் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு.

சேலம். ஏப்.17–

கடைசி வரை பாஜவுக்கு அடிமையாகவும், கோழை யாகவும் இருக்காதீங்க, வாழ்க்கையில் ஒரு முறையாவது தமிழகத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுங்க பழனிசாமி.



கடைசி வரை கோழை, அடிமையா இருக்காதீங்கஞ் வாழ்க்கையில் ஒரு முறையாவது தமிழகத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுங்க பழனிசாமி என்று எடப்பாடி யின் சொந்த ஊரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசி உள்ளார்.

சேலம் கோட்டை பகுதியில் நேற்றிரவு நடந்த பொதுக்கூட்டத் தில் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: முழுக்க முழுக்கப் பெண்களுக் காகவே – பெண்களின் உரிமைகளுக்காகவே செயல்படுகிறது நம்முடைய அரசு. நான் உறுதியாக சொல்கிறேன். இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி எப்போதும் பெண்களின் நலனுக்கான ஆட்சி.

நம்மைப் பார்த்து, “பெண்களுக்கான இட ஒதுக்கீடு வரும் நேரத்தில் ஏதோ சதி செய்கிறார்கள். தி.மு.க.வுக்குப் பிடிக்கவில்லை” எனப் பழனிசாமி பேசியிருக்கிறார். 33 பர்செண்ட் இட ஒதுக்கீடு என்றால் என்ன என்பது, பழனிசாமிக்குத் தெரியும் முன்பே, உள்ளாட்சி களில் அதைச் செயல்படுத்திய வர் நம்முடைய தலைவர் கலைஞர். இப்போது அதை 50 விழுக்காடாக நடைமுறைப் படுத்தியவன்தான், உங்கள் முன்னால் நிற்கும் இந்த ஸ்டாலின். சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 விழுக்காடு வேண்டும் என்று பல ஆண்டுகாலமாகத் தி.மு.க. போராடி வருகிறது.

பா.ஜ. நினைத்தால் அதை எப்போதோ கொண்டு வந்திருக்கலாம். நாங்களும் அதைத்தான் கேட்கிறோம். ஆனால், தேவையே இல்லாமல் சென்சஸ், தொகுதி மறுவரையறை என சம்பந்தம் இல்லாத விஷயங்களோடு அதை முடிச்சுப் போட்டு, அது நிறைவேறக் கூடாது என்று பாஜ நினைக்கிறது. மிஸ்டர் பழனிசாமி! முதலில் புரிந்து கொள்ளுங்கள். இங்கே பிரச்சினை பெண்கள் இட ஒதுக்கீடு அல்ல! அதை அனைவருமே வரவேற்கிறோம்! தொகுதி மறுவரையறைதான் இங்கே பிரச்னை! தமிழ்நாடே கொதித்துப் போயிருக்கிறது.

நாளைக்கு அனைவர் வீட்டிலும் கருப்புக் கொடி ஏற்றப் போகிறோம்! பெண்கள் எல்லாம் பாஜவின் இந்த அலங்கோலச் சட்டத்திற்கு காலையில் வீட்டின் வாசலில் கோலம் மூலமாகவே எதிர்ப்புத் தெரிவிக்கப் போகிறீர்களா? இல்லையா? ஆமாம் (பெண்கள்). இதில் அரசியல் வேறுபாடுகளுக்கு இடமே இல்லை. ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது. எடப்பாடி அவர்களே கடைசி வரை கோழையாக அடிமையாக இருந்தால், தமிழ்நாட்டின் களங்கமாகத்தான் வரலாற்றில் நீங்கள் நினைவுகூரப்படுவீர்கள்!

இது வரலாறு உங்களுக்குக் கொடுத்திருக்கும் கடைசி வாய்ப்பு! ஒரு முறை – ஒரே ஒரு முறையாவது பாஜவை எதிர்த்துத் தைரியமாகப் பேசுங்கள். உறுதியான எஃகுக்கு பெயர் பெற்ற ஊர் இந்த சேலம். இப்படிப்பட்ட பெருமைமிகு ஊரில் பிறந்துவிட்டு, ஏன் டெல்லிக்கு முதுகு வளைந்தே இருக்கிறீர்கள்? வெட்கமாக இல்லையா?

பக்கத்தில் இருக்கும் கேரளா, தெலங்கானா, கர்நாடகா போன்ற மாநிலங்கள்கூட அவர்கள் மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறார்கள். கட்சி வேறுபாடுகளை மறந்து ஒரே குரலில் பேசுகிறார்கள். நீங்கள் தமிழன்தானே? தமிழனாக இருந்துவிட்டுத் தமிழ்நாட்டுக்கு இப்படித் துரோகம் செய்ய லாமா? உங்கள் துரோகங் களுக்குத் தண்டனை மே 4 அன்று கிடைக்கத்தான் போகிறது. இவ்வாறு பேசினார்.

* முதல்வர் தலைமையில் பிரமாண்ட மகளிர் பேரணி கமல்ஹாசன், பிரேமலதா பங்கேற்பு

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் நடந்த பிரசார பொதுக்கூட்டத்தில் நேற்று மாலை முதல்வர் மு.க.ஸ்டா லின் கலந்து கொண்டு பேசினார். பின்னர் கார் மூலம் சேலம் மாவட்டத்திற்கு முதல்வர் வந்தார். சேலம் அண்ணா பூங்காவிற்கு வந்த முதல்வர் அங்குள்ள முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி சிலையின் கீழ் வைக்கப்பட்டிருந்த கலைஞர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அப்போது, மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன், தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா ஆகியோரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர், அங்கிருந்து கோட்டை மைதானம் வரை ஒன்றரை கிலோ மீட்டர் பிரமாண்ட மகளிர் எழுச்சி பேரணி நடந்தது. இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின், கமலஹாசன், பிரேமலதா உள்பட 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஆயிரக்கணக்கான பெண்கள், பொதுமக்கள் அவர்களுக்கு சாலையின் இருபகுதியில் நின்றும் உற்சாக வரவேற்பு கொடுத்தனர். கலெக்டர் அலுவலகம் முன்பு வந்தபோது, ஆயிரம் கிலோ சம்பங்கி பூக்களை தூவி முதல்வரை பெண்கள் வரவேற்றனர்.

* ‘ரெஸ்ட்’ இல்லாமல் உழைக்கும் பெண்களுக்கான ‘ரெஸ்பெக்ட்’தான் மகளிர் உரிமைத்தொகை திட்டம்

“உங்க மனைவி என்ன பண்றாங்க?” என்று கேட்டால், பல பேர் மிகவும் சாதாரணமாக “வீட்டுல சும்மாதான் இருக் காங்க” என்று சொல்லிவிடு வார்கள். இதை மாற்ற வேண்டும், பெண்கள் இந்தச் சமூகத்திற்கும் –குடும்பங்களுக் கும் செய்யும் பங்களிப்பை அங்கீகரிக்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்டதுதான் உரிமைத்தொகை என்று நான் அழுத்தம் திருத்தமாக குறிப்பிடுகிறேன்!

ஆயிரம், இரண்டாயிரம் என்பதைத் கடந்து, ‘ரெஸ்ட்’ இல்லாமல் உழைக்கும் நம்முடைய பெண்களுக்கு இந்த அரசு தரும் ‘ரெஸ்பெக்ட்’தான் உரிமைத்தொகை! முடியவே முடியாது என்று சொன்ன திட்டம், இன்றைக்கு ஒரு கோடியே 31 இலட்சம் பெண்களுக்குக் கிடைக்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

## யாதவர்களுக்கு 6 தொகுதிகள் !

# எடப்பாடி கே.பழனிசாமிக்கு எம்.திருவேங்கடம் யாதவ் நேரில் நன்றி



தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தலைமை தாங்குபவரும் அ.தி.மு.க பொதுச் செயலாளருமான எடப்பாடி கே.பழனி சாமியை தமிழ் மாநில யாதவ மகாசபையின் நிறுவனர் ஸ்ரீரங்கம் எம்.திருவேங் கடம் யாதவ் இயக்க நிர்வாகி களுடன் சந்தித்தார்

தற்போது, நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் அ.தி.மு.க.வில் 6 யாதவர்களுக்கு வாய்ப்பு வழங்கியமைக்காக எடப்பாடி கே.பழனி சாமிக்கு திருவேங்கடம் யாதவ் பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்ததோடு அதிமுக தலைமை யிலான கூட்டணியின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவோம் என உறுதியளித்தார்

இந்நிகழ்வின்போது முன்னாள் அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர்,திருச்சி மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் துணைமேயர் ஜெ.சீனிவாசன், ,தமிழ் மாநில யாதவ மகாசபை மாநில இளைஞரணி தலைவர் விஜய் கிருஷ்ணா யாதவ், ஒருங்கிணைப்பாளர் எடத்தெரு பார்த்தசாரதி, மாணவரணி லஷ்மிகாந்தன் உள்பட பலர் உடனிருந்தனர்



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்ற தொகுதி, கம்புளியாம்பட்டியில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திடும் வகையில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று தேர்தல் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்கள் பொதுமக்களிடம் வழங்கி கலந்துரையாடினார்.

# மணப்பாறை தொகுதி வளர்ச்சி அடைய பாடுபடுவேன்

## தமிழக வெற்றி கழக வேட்பாளர் ரா.கதிரவன் வாக்குறுதி

திருச்சி. ஏப்.17–

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றிக்காக வேட்பாளர் ரா.கதிரவன் மருங்காபுரி மணப்பாறை வையம்பட்டி உள்ளிட்ட ஒன்றியங்களில் சுட்டெரிக்கும் வெயிலில் தீவிர தேர்தல் பரப்புரை மேற்கொண்டு வருகிறார்



இன்று மணப்பாறை ஒன்றிய பகுதியான பாரதியார் நகர் சீகம்பட்டி உசிலம்பட்டி புது காலனி பழைய காலனி எடத்தெரு சாம்பட்டி சூலியாபட்டி கீழ பொய்கபட்டி கஸ்பா பொய்கை பற்றி தொப் பம்பட்டி உள்ளிட்ட 60க்கும் மேற்பட்ட கிராமங்களில் தேர்தல் பரப்பரை மேற் கொண்டார்

தேர்தல் பரப்புரை யில் தமிழக வெற்றி கழக வேட்பாளர் கதிரவன் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி விசில் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்

மேலும் அவர் வாக்காளர்கள் மத்தியில் மணப்பாறை சட்டமன்ற தொகுதியின் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் சிறந்த முறையில் செய்து தர மணப்பாறை தொகுதிக்கு இந்த முறை மாற்றம் தேவை என்ற அடிப்படையில் தமிழக வெற்றி கழகம் சார்பில் தற்போது மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உங்கள் மத்தியில் வாக்கு சேகரிக்க வந்துள்ளேன் ஒரு இளைஞனாக உங்களுக்காக உழைக்க ஒரே ஒரு முறை எனக்கு வாய்ப்பு தாருங்கள் மணப்பாறை தொகுதி முழுவதையும் அனைத்து அடிப்படை தேவை களும் பூர்த்தி செய்த சட்டமன்ற தொகுதியாக மாற்றி காட்டுகிறேன்

மேலும் மணப்பாறை சட்டமன்ற தொகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் பல்வேறு கிராமங்களில் சாலை வசதி குடிநீர் வசதி படித்த இளைஞர்களுக்கு வேலையில்லாமல் உள்ளனர் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு இது கடைசி வாய்ப்பு இந்த வாய்ப்பை பயன்படுத்தி இந்த முறை என்னை சட்டமன்றத்திற்கு அனுப்புங்கள் உங்கள் குரலாய் உங்களுடைய அடிப்படைத் தேவைகள் அனைத்தையுமே சத்தியமாக நிறைவேற்றித் தருவேன் என்று வாக்காளர்கள் மத்தியில் வாக்கு சேகரித்தார்

வேட்பாளர் கதிரவன் செல்லும் இடங்களில் எல்லாம் பெண்கள் உற்சாகமாக வரவேற்பளித்தனர்.

# மத்தூரில் அதிமுக வேட்பாளர் டி.எம். தமிழ்செல்வம் விற்கு ஆதரித்து கல்யாணசுந்தரம் அனல் பறக்கும் பிரசாரம்!




கிருஷ்ணகிரி. ஏப்.17–

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட் பாளர் டி.எம். தமிழ் செல்வம் அவர்களை ஆதரித்து,அக்கட்சியின் கழக பேச்சாளர் கல்யாணசுந்தரம் இன்று மத்தூர் பேருந்து நிலையப் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

திறந்த வாகனத்தில் நின்றவாறு பொதுமக்களிடையே உரையாற்றிய கழகப் பேச்சாளர் கல்யாண சுந்தரம், வேட்பாளர் டி.எம். தமிழ்செல்வம் அவர்களுக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக் களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத் தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என உருக்கமான வேண்டு கோள் விடுத்தார். அதிமுக அரசின் சாதனைகளையும், தொகுதிக்குச் செய்த நற்பணிகளையும் அவர் விரிவாக எடுத் துரைத்தார்.

இந்த தேர்தல் பிரசார நிகழ்வில் அதிமுகவின் மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். மேலும், அதிமுக கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சிகளின் பொறுப் பாளர்கள் மற்றும் நிர்வாகிகளும் பங்கேற்று வேட்பாளருக்கு ஆதரவாக மத்தூர் பேருந்து நிலையப் பகுதியில் திரண்டிருந்த பொதுமக்கள் மற்றும் வணிகர்களிடம் வேட் பாளரின் வெற்றிக்கு ஆதரவு தருமாறு அவர்கள் கேட்டுக் கொண்டனர்.



2026 தமிழ்நாடு சடடமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதி மணப்பாறை பேருந்து நிலைய வளாகத்தில் வேளாண்மை துறையின் சார்பில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்கி வாக்களர் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தி விழிப்புணர்வுஏற்படுத்தப்பட்டது.

# அண்ணல் அம்பேத்கருக்கு மரியாதை




சட்ட மேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு, பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவ சிலைக்கு, கொங்குநாடு திராவிட கட்சி நிறுவனத் தலைவர் ஏ ஜி பாட்டன் சக்திவேல் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# விஜய்யின் ஜனநாயகன் திரைப்படத்தை கசியவிடப்பட்ட விவகாரத்தில் உதவி படத்தொகுப்பாளர் உள்பட 3 பேர் கைது

சென்னை: ஏப்.17–

விஜய்யின் ஜனநாயகன் திரைப்படத்தை கசியவிடப்பட்ட விவகாரத்தில் உதவி படத்தொகுப்பாளர் உள்பட 3 பேர் கைது செய்தனர். படக்குழு தரப்பில் இருந்தே கசியவிட்டது அம்பலம். எடிட்டிங் ஸ்டுடியோவில் இருந்து எடுத்தே உதவி படத்தொகுப்பாளர் ஜனநாயகன் படத்தை திருடியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. படக்குழு தரப்பில் இருந்தே ஜனநாயகன் திரைப்படம் கசிய விடப்பட்டது போலீஸ் விசாரணை அம்பலமானது

# தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் மாநிலங்களின் குரல்வளையை நெரிக்கும் மத்திய அரசின் தன்னிச்சையான நடவடிக்கைக்கு தேசிய மக்கள் முன்னணி கடும் கண்டனம்!



புதுச்சேரி, ஏப்.17–

இந்தியாவின் கூட்டாட்சித் தத்துவத்திற்கும், ஜனநாயகத்தின் அடிப்படைக்கும் பேராபத்தை விளைவிக்கும் வகையில், மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதிகளை மறுசீரமைப்பு (Delimitation) செய்ய மத்திய அரசு மேற் கொண்டுவரும் தன்னிச்சையான நடவடிக்கைகளை 'தேசிய மக்கள் முன்னணி' வன்மையாகக் கண்டிக்கிறது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் அனைத்து மாநில மக்களின் குரலுக்கும் சமமான மதிப்பளிக்கப்பட வேண்டும். ஆனால், வரவிருக்கும் தொகுதி மறுசீரமைப்புத் திட்டமானது, இந்திய ஒன்றியத்தின் சமநிலையை அடியோடு சீர்குலைக்கும் ஒரு அபாயகரமான திட்டமாகும். இதன் மூலம் மத்திய அரசு பின்வரும் ஜனநாயக விரோதச் செயல்களை முன்னெடுக்கிறது:

1. முன்னேறிய மாநிலங்களுக்கு வழங்கப்படும் அநீதியான தண்டனை:

கடந்த பல தசாப்தங்களாக, மத்திய அரசின் கொள்கைகளை ஏற்று, குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்கள் உள்ளிட்ட பல மாநிலங்கள் இன்று தண்டிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதற்காக, நாடாளுமன்றத்தில் அம்மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பது எந்த வகையில் நியாயம்? இது, சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு வழங்கப்படும் அப்பட்டமான துரோகமாகும்.

2. கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான செயல்:

இந்தியா பல மொழிகள், கலாச்சாரங்கள் மற்றும் மாநிலங்களைக் கொண்ட ஒரு ஒன்றியம். மக்கள் தொகையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தொகுதிகளைப் பிரிப்பது, அதிக மக்கள் தொகை கொண்ட குறிப்பிட்ட சில மாநிலங்களின் ஆதிக்கத்தை ஒட்டுமொத்த நாட்டின் மீதும் திணிக்கும் செயலாகும். இது மாநில சுயாட்சிக் கோட்பாட்டிற்கும், கூட்டாட்சித் தத்துவத்திற்கும் முற்றிலும் எதிரானது.

3. ஆலோசனையின்றி தன்னிச்சையாகச் செயல்படும் போக்கு:

இவ்வளவு பெரிய, நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்கக் கூடிய ஒரு விவகாரத்தில், மாநில அரசுகளுடனோ, அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சிகளுடனோ, அல்லது சிவில் சமூக அமைப்புகளுடனோ எவ்வித வெளிப்படையான ஆலோசனையும் நடத்தாமல் மத்திய அரசு ரகசியமாகச் செயல்படுவது கடும் கண்டனத்திற்குரியது. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் சர்வாதிகாரப் போக்குக்கு இடமில்லை.

தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கைகள்:

மக்கள் தொகை அடிப்படையிலான மறுசீரமைப்பைக் கைவிட வேண்டும்: 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் நாடாளுமன்ற இடங்கள் எவ்வாறு முடக்கி வைக்கப்பட்டதோ, அதே நிலை தொடர வேண்டும். அல்லது, மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையாத வகையில் ஒரு மாற்றுச் சூத்திரத்தை (Alternative Formula) உருவாக்க வேண்டும்.

அனைத்துக் கூட்டத் தொடரைக் கூட்டுக: நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டி, தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் சமமான நீதி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

மாநில முதல்வர்கள் மாநாடு:

இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்க உடனடியாகத் தேசிய அளவிலான மாநில முதல்வர்கள் மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய சிறப்புக் கூட்டத்தை மத்திய அரசு கூட்ட வேண்டும்.

தேசிய மக்கள் முன்னணி, மாநிலங்களின் உரிமைகளைக் காப்பதில் சமரசம் இன்றித் தொடர்ந்து குரல் கொடுக்கும். கூட்டாட்சித் தத்துவத்தைச் சிதைத்து, குறிப்பிட்ட சில மாநிலங்களின் அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த நினைக்கும் இந்தத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்.

இல்லையேல், நாடு முழுவதும் உள்ள ஜனநாயகச் சக்திகளையும், ஒட்டுமொத்த மக்களையும் ஒன்றிணைத்து, மாநில உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மாபெரும் அறப்போராட்டங்களை 'தேசிய மக்கள் முன்னணி' முன்னெடுக்கும் என எச்சரிக்கிறோம்.

# கல்விதான் வாழ்க்கையில் மிக முக்கிய ஆயுதம் என்பதை உணர்ந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் கல்விக்கு முக்கியதுவம் தந்தார்.

## மணப்பாறை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி கட்சி மனிதநேய மக்கள் கட்சி வேட்பாளர் ப.அப்துல் சமத் சூறாவளி பிரச்சாரம்



மணப்பாறை, ஏப்.17–

கல்விதான் வாழ்க்கையில் மிக முக்கிய ஆயுதம் என்பதை உணர்ந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு முழுவதும் கல்விக்கு முக்கியதுவம் தந்தார் என திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி கட்சி மனிதநேய மக்கள் கட்சி வேட்பாளர் ப அப்துல் சமத் வையம் பட்டி ஒன்றிய பகுதிகளில் சுட்டெக்கும் வெயிலில் சூறாவளி சுற்றுப் பயனம் மேற்கொண்டு பிரச்சாரம் மேற்கொண்டார்.

வையம்பட்டி ஒன்றியம் மற்றும் மணப்பாறை ஒன்றிய பகுதிகளில் காலை முதல் இரவு வரை 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் தேர்தல் பரப்புரை மேற் கொண்ட திமுக வேட்பாளர் ப அப்துல் சமத், பேசும் போது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் 5 ஆண்டு கால ஆட்சியில் தமிழ்நாடு பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்று முதன்மை மாநிலமாக திகழ்கிறது

முக்கியமாக தமிழ்நாடு முதலமைச்சர் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி பள்ளி செல்லும் மாணவர்கள் சிரமமின்றி தங்களது கல்வியை வளர்த்து கொள்ளும் விதமாக எளிய முறையில் கல்வி பயில பல்வேறு திட்டங்களை வகுத்து கொடுத்துள்ளார்

பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் என்ற உயரிய திட்டத்தை வகுத்து எந்த மாணவர்களும் பள்ளி செல்லாமல் இருக்க கூடாது என்பதற்கு 1 ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இந்த காலை உணவு திட்டம் கொண்டு வந்தார். தற்போது அந்த திட்டத்தில் 8 ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் விரிவாக்கம் செய்து படிக்கும் மாணவர்கள் பசியுடன் படிக்க கூடாது என்று கல்விக்கு முக்கியத்துவத்தை வழங்கினார்.

அதேபோல் படித்த இளைஞர்களுக்கு மாதம், மாதம், உதவி தொகை வழங்கியும் பெண்கள் தினம்தோறும் கட்டணமில்லா பேருந்தில் பயணம் செய்யும் வசதிகளையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். முதல்வரின் இந்த மக்கள் நல பணிகள் தொடர எனக்கு மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்று பேசினார்.

# விக்கிரவாண்டியில் உதயசூரியன் சின்னத்திற்கு

## புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் சிவா தீவிர வாக்கு சேகரிப்பு!



புதுச்சேரி, ஏப்.17–

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அண்ணன் தளபதியார் உத்தரவின் பெயரில், விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் பார்வையாளராக நியமிக்கப் பட்டுள்ள புதுச்சேரி மாநிலக் கழக அமைப் பாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா அவர்கள் இன்று மதியம் விக்கிர வாண்டி தொகுதிக்கு உட்பட்ட விக்கிர வாண்டி டவுன் பகுதி யில் வாக்கு சேகரித்துக் கொண்டிருந்த கழக வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

அப்போது புதுச்சேரி மாநிலக் கழக பொதுக் குழு உறுப்பினர்கள் தங்கவேலு, கோபாலகிருஷ்ணன், கார்த்திகேயன் மற்றும் விக்கிரவாண்டி தொகுதி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு

# புதுவையில் திமுக வீடுகளில் கருப்புக்கொடி மசோதா நகலை எரித்து போராட்டம்



புதுச்சேரி, ஏப்.17

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட உள்ள தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு திமுக எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் மத்திய பாஜனதா அரசு தென்னிந்திய மாநிலங்களின் தொகுதிகளை குறைத்து வஞ்சிக்க திட்டமிட்டுள்ளதாக திமுக தலைவர் ஸ்டாலின் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். தமிழகத்தில் இன்று கருப்புக்கொடி ஏற்றும் போராட்டம் நடத்தவும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

இதை பின்பற்றி புதுவை மாநில திமுக சார்பில் கருப்புக்கொடி ஏற்றும் போராட்டம் நடந்தது.

இதையொட்டி இன்று லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகம் முன்பு திமுக மாநில அமைப்பாளர் சிவா அவர்கள் கருப்புச்சட்டை அணிந்து, கருப்புக்கொடி ஏற்றினார். தொடர்ந்து மசோதா நகலை எரித்தனர்.

நிகழ்ச்சியில் எம்எல்ஏ அனிபால்கென்னடி, முன்னாள் எம்எல்ஏ மூர்த்தி, திமுக வேட்பாளர்கள் கோபால், விக்னேஷ் கண்ணன், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், நடராஜன் மற்றும் நிர்வாகிகளும் கருப்பு சட்டை அணிந்து பங்கேற்றனர்.

இதேபோல திமுக கட்சி நிர்வாகிகள், பிரமுகர்களின் வீடுகளிலும் கருப்புக்கொடி ஏற்றப்பட்டது.

# கோடை விடுமுறையில் மாணவர்கள் ஏரி, குளம், குட்டைகளில் தனியாக விளையாடாதீர்கள்: கல்வியாளர் பேச்சு




வந்தவாசி, ஏப் 17:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த புதுவணக்கம்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்கு கோடை விடுமுறையை பயனுள்ள முறையில் கழிக்கும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை மு.தமிழரசி தலைமை தாங்கினார். தெள்ளாறு புலவர் ந.பானு முன்னிலை வகித்தார். பள்ளி ஆசிரியை த.செந்தமிழ் செல்வி வரவேற்றார்.

சிறப்பு அழைப் பாளராக, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, கோடை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ள முறையில் கழிக்கும் வழிமுறைகள் பற்றிய கருத் துரைகளை வழங்கினார். மேலும் ஏரி, குளம் குட்டை களில் மாணவர்கள் தனியாக சென்று குளிக்க கூடாது எனவும், ஆரோக்கியமான உணவு முறைகளை உட்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பிழையில்லாமல் பாடியும், எழுதியும் காட்டிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திருவேங்கடம் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார். மேலும் பெற்றோர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.




# ஈரோடு கிழக்கு தொகுதி அதிமுக வேட்பாளர் இரா. மனோகரன் தீவிர வாக்கு சேகரிப்பு.

## திறந்த வேனில் தீவிர பிரச்சாரம்..



ஈரோடு. ஏப்ரல். 17

ஈரோடு கிழக்கு தொகுதி அதிமுக வேட்பாளர் பெரியார் நகர் இரா. மனோகரன் தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் பெரியார் நகர் இரா. மனோகரன் தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அதன்படி அவர் காலை மற்றும் மாலை நேரங்களில் அவர் திறந்த பிரச்சார வெயில் தொகுதி முழுவதும் சென்று பிரச்சாரம் செய்து வருகிறார்.

அதிமுகவேட்பாளர் பெரியார் நகர் இரா. மோகன் செல்லும் இடங்களில் அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

இரட்டை இலை சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் வேட்பாளர் பெரியார் நகர் இரா மனோகரனுக்கு பொதுமக்கள் தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

# கழகத் தலைவர் "தளபதியார்" ஆணைக்கிணங்க, ஒன்றிய பாஜக அரசின் "கருப்புச் சட்டத்தை" எதிர்த்து, உருளையன்பேட்டை எஸ்.கோபால் கருப்புக்கொடி போராட்டம் !



புதுச்சேரி, ஏப்.17–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அண்ணன் "தளபதியார்" அவர்கள், தொகுதி வரையறை "Delimitation" என்ற பெயரில், ஒன்றிய பா.ஜ.க. அரசு., தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சிப்பதை கண்டித்தும்,

நேற்று (16 04 2026) நாடாளுமன்றத்தில் பாஜக அரசு கொண்டு வரப்போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அனைவரும் நம்முடைய வீட்டிலும், அலுவலகத்திலும் கருப்புக் கொடியை ஏற்றி, நம் எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து, நமது புதுச்சேரி உருளையன்பேட்டை சட்டமன்றத் தொகுதியின், நாளைய சட்டமன்ற உறுப்பினரும், திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினருமான திரு.எஸ்.கோபால் அவர்கள்., தனது தொகுதி கழக அலுவலகத்திற்கு முன்பு., "கருப்பு கொடியேற்றி", கழகத் தலைவர் "தளபதியார்" அவர்களின் ஆணைக்கிணங்க, மத்திய ஒன்றிய பாஜக அரசை எதிர்த்து, தனது கண்டனங்களை பதிவு செய்தார்.

# கள்ளக்குறிச்சியில் அதிமுக 4ஆவது முறையாக வெற்றி பெறும்: நடிகை விந்தியா பிரச்சாரம்.



கள்ளக்குறிச்சி ஏப் 17

கள்ளக்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக 4 ஆவது முறையாக வெற்றி பெறும் என அதிமுக கொள்கை பரப்பு செயலரும், நடிகையுமான விந்தியா தெரிவித்தார்.

தியாகதுருகம் பேருந்து நிலையம் அருகே வேனில் நின்றவாறு கள்ளக்குறிச்சி அதிமுக வேட்பாளர் சு.ராஜீவ் காந்தியை ஆதரித்து பிரசாரம் செய்தபோது, மேலும் அவர் பேசியதாவது:

கள்ளக்குறிச்சி தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் சார்பில் அதிமுக வேட்பாளரான சு.ராஜீவ் காந்தி போட்டியிடுகிறார். அறிமுக வேட்பாளர்களுக்கு வாய்ப்பு கொடுப்பது அதிமுகவின் சிறப்பு. கள்ளக்குறிச்சி அதிமுகவின் கோட்டையாக உள்ளது. கடந்த 3 முறை அதிமுக இங்கு வெற்றி பெற்றுள்ளது. 4ஆவது முறையும் அதிமுக வெற்றிபெறும். அதிமுகவில் அடிப்படை தொண்டர்கள் கூட உயர் பதவிக்கு வரலாம். எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் தமிழகத்தில் எந்த வன்முறையும் இல்லாமல் அமைதி பூங்காவாக இருந்தது. தற்போது தமிழகத்தில் உள்ள நிலை மக்களுக்கு தெரியும் என்றார் அவர்.

உடன் தொகுதி பொறுப்பாளர்கள் மா.செந்தில்குமார், அ. பிரபு, ஒன்றியச் செயலர் வெ.அய்யப்பா, நகரச் செயலர் பி.எஸ்.கே. ஷியாம் சுந்தர், மாவட்ட பேரவை செயலர் இராம.ஞானவேல், மாவட்ட வழக்குரைஞர் பிரிவு செயலர் பெ.சீனிவாசன், மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலர் எஸ். ஜான் பாஷா மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரே அமைவிடத்தில் 5 அதற்கு மேற்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் உள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் வாக்காளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டும் வசதிகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யும் பொருட்டு தேசிய கலலூரி மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன், மாநகர காவல் ஆணையர் காமினி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

# டெல்லி எஜமானர்களுக்கு பல்லக்கு தூக்கும் எடப்பாடி பழனிசாமி.. மொடக்குறிச்சி பிரச்சார பொதுக்கூட்டத்தில் வைகோ கடும் தாக்கு..





ஈரோடு. ஏப்ரல். 17

தமிழக மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு டெல்லி எஜமானர்களுக்கு பள்ளத்துக்கும் பணியை எடப்பாடி பழனிசாமி சிறப்பாக செய்தி வருகிறார் என்று மொடக்குறிச்சி மதிமுக தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் வைகோ கடுமையாக தாக்கி பேசினார்.

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் இம்மாதம் 23ஆம் தேதி நடைபெறுகிறது. கடந்து மே நான்காம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில் தமிழகத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் திமுக, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், தேமுதிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை களத்தில் இறக்கி விட்டு தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி திமுக கூட்டணி கட்சியான மதிமுகவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தத் தொகுதியில் மதிமுக சார்பில் சா. செந்தில்நாதன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

இவர் தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த நிலையில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மற்றும் மதிமுகவின் முதன்மைச் செயலாளர் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் செய்து இருந்த நிலையில், நேற்று முன் தினம் இரவு மொடக்குறிச்சி நான்கு ரோட்டில் மீண்டும் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தேர்தல் பிரச்சாரம் செய்தார். அங்க அமைக்கப்பட்டு இருந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்ட மேடையில் மதிமுக வேட்பாளர் செந்தில் நாதனே ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் அவர் வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் பேசியதாவது..

மத்திய பாசிச பாஜக தனது ஆட்டோ போஸ்ட் கால்களை தமிழகத்தில் பதிக்க பெரும் முயற்சி எடுத்து. இருப்பினும் அந்தப் பாசிச கும்பலின் எண்ணம் நிறைவேறாது.

மத்திய பாஜக பாசிச கும்பலுக்கு அவர்களை தனது எஜமானார்களாக எண்ணி பல்லக்குத் தூக்கும் பணியினை எடப்பாடி பழனிசாமி சிறப்பாக செய்து வருகிறார்.

இன்றைக்கு அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் இந்த நாளில் பெரியார் பிறந்த மண்ணில் நான் நின்று பேசுவது பெருமையாக உள்ளது.

தமிழக கலாச்சாரம் மற்றும் திராவிட சித்தாந்தங்களை பற்றி மோடி அமிச்சா, தமிழ் நாட்டில் உள்ள அண்ணா மலைக்கும் என்ன தெரியும்.

தலைவர் கலைஞரின் இறுதி நாளில் தளபதி ஸ்டாலின் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு கலைஞரை சந்திக்க வைத்தார். அப்பொழுது கண்கலங்கிய தலைவர் கலைஞர் முப்பதாண்டு காலம் எனக்கு தளபதியாக இருந்தாய். சில காலங்கள் என்னை விட்டு பிரிந்து இருந்தாய். மீண்டும் என்னுடன் இணைந்து விட்டாய். என்ற போது உங்களுக்கு துணை நின்றது போன்று இனிவரும் காலங்களில் ஸ்டாலினுக்கும் துணை நிற்க வேண்டும் என்று எனது இரு கரங்களையும் பற்றி கூறிய போது என் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது.

தொடர்ந்து இன்று வரை எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும் சாலினை விட்டு விலகாமல் நான் உடன் நிற்கின்றேன்.

சட்டம் ஒழுங்கு பற்றி எடப்பாடி பழனிசாமிக்கு பேசுவதற்கு என்ன யோகிதை உள்ளது. பொள்ளாச்சி பாலியல் சம்பவங்கள் மறந்து விட்டதா.? சாத்தான்குளம் தந்தை மகன் இருவரும் காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் மறந்துவிட்டதா.?

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் 13 பேர் இறந்தது மறந்துவிட முடியுமா.? இது அனைத்தும் எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடைபெறவில்லையா. அதனால் தமிழக சட்ட ஒழுங்கு பற்றி பேச எடப்பாடி பழனிச்சாமிக்கு எந்த ஒரு தார்மீக உரிமையும் இல்லை.

தமிழக மக்களுக்காக பல்வேறு சட்டப் போராட்டங்களை நடத்தி டெல்லி வரை சென்று வெற்றி பெற்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக நின்றவன் இந்த வைகோ.

அதேபோல் எனது மதிமுகவின் வேட்பாளராக மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிடும் செந்தில் நாதனுக்கு நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்தால் அவர் இந்த தொகுதி மக்களுக்காக 24 மணி நேரமும் பணியாற்றுவார். அவருக்கு நான் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளேன். உங்களின் முதல் பணி மொடக்குறிச்சி தொகுதி மக்களின் பணி தான் என்று இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளேன். எனவே அவர் வெற்றி பெற்றாலும் உங்களுடன் தான் பயணிப்பார். வைகோ குருவித் தருகிறேன்.

இவ்வாறு மொடக்குறிச்சி தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பேசினார்.

# குழந்தைகளும் விரும்பும் வேட்பாளர் சா. செந்தில்நாதன்.. மொடக்குறிச்சி மதிமுக வேட்பாளருக்கு பெருகும் ஆதரவு..




ஈரோடு. ஏப்ரல். 17

மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிடும் மதிமுக வேட்பாளர் சா. செந்தில் நாதனுக்கு தொகுதியில் ஆதரவு பெருகி வருகிறது. குழந்தைகளும் அன்பு காட்டி ஆரத்தி எடுப்பதால் பெற்றோர்கள் மகிழ்ச்சி.

தமிழக சட்டமன்ற பொது தேர்தல் இம்மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. தொடர்ந்து அடுத்த மாதம் மே நான்காம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

இந்த நிலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைமையிலான அணியில் மொடக்குறிச்சி மதிமுக வேட்பாளராக சா. செந்தில்நாதன் அறிவிக்கப்பட்டு அவர் வேட்பமான தாக்கல் செய்து தனது பிரச்சாரத்தை தொடங்கி தொகுதி முழுவதும் பம்பரம் போல் சுழன்று வருகிறார்.

இவருக்கு ஆதரவாக ஈரோடு எம்பி கே இ பிரகாஷ் மற்றும் திமுக தலைவர்கள் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை கேட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள மதிமுக வேட்பாளர் செந்தில் நாதனுக்கு, பெண்கள் ஆரத்தி எடுத்து அன்பு காட்டி ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து மதிமுக வேட்பாளர் செந்தில்நாதன் பிரச்சாரத்திற்கு செல்லும் இடங்களில் உள்ள பள்ளி குழந்தைகள் ஆர்வத்துடன் அவரிடம் வந்து பேசி அவருக்கு ஆரத்தி எடுத்து அன்பு காட்டி வருகின்றனர். குழந்தைகளின் இந்த அன்பால் மகிழ்ந்து போன வேட்பாளர் சா. செந்தில்நாதன் அவர்களை ஆரத்தழுவி பதிலுக்கு தன்னுடைய அன்பையும் அவர்களிடம் தெரிவித்து.

இந்த நெகிழ்ச்சியான தருணங்களை பார்த்த குழந்தைகளின் பெற்றோர்கள் உதயசூரியனுக்கு தான் எங்கள் வாக்கு என்று உறுதி அளித்து வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

# அவர்தான் நான் நான்தான் அவர், சேலத்தில் 7 தொகுதிகளில் ஒரே பெயரில் வேட்பாளர்கள்.

சேலம். ஏப்.17–

சேலம் மாவட்டத்தில் உள்ள 7 சட்டப்பேரவை தொகுதிகளில் ஒரே பெயரில் சுயேச்சைகளுடன் சேர்த்து பல வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக சேலம் மேற்கு தொகுதியில் 5 பேர் தற்போதைய எம்எல்ஏவும், ராமதாஸ் ஆதரவாளருமான அருள் பெயரில் வேட்புமனு கொடுத்ததுதான் சுவாரஸ்யம்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் வேட்புமனு தாக்கல் முடிந்த நிலையில், வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியாகியுள்ளது. இதைத் தொடர்ந்து, அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு கட்சி சின்னமும், சுயேச்சைகளுக்கு அவர்களின் விருப்ப அடிப்படையில் தனிச் சின்னமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை 11 தொகுதிகளில் போட்டியிட 277 வேட்பாளர்கள், 355 வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர். இதில், மனு நிராகரிப்பு, வேட்புமனுவை திரும்பப் பெற்றதுபோக, இறுதியாக 193 வேட்பாளர்கள் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டது.

பொதுவாக, ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெவ்வேறு பெயர்களுடன் இருப்பது வழக்கமானது. ஆனால், ஒருசில சமயங்களில் வேட்பாளர்களின் பெயரில் குழப்பதை ஏற்படுத்த, ஒரே பெயரில் ஒன்றுக்கும் மேற்பட்டோர் வேட்புமனுவை தாக்கல் செய்வார்கள்.

அதன்படி, சேலம் மாவட்டத்தில் வெளியிடப்பட்ட இறுதி வேட்பாளர் பட்டியல்களில், 7 தொகுதிகளில் சுவாரஸ்யமாக, ஒரு தொகுதியில் ஒரே பெயரைக் கொண்ட வேட்பாளர்கள் ஏராளமானோர் வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளனர். இதில், அதிகபட்சமாக சேலம் மேற்கு தொகுதியை பொறுத்தவரை பாமகவின் ராமதாஸ் அணியைச் சேர்ந்த இரா. அருள் உள்பட 5 பேர் அருள் என்ற பெயருடன் வேட்புமனு அளித்துள்ளனர்.

இதே தொகுதியில், பாமகவின் அன்புமணி அணியைச் சேர்ந்த கார்த்தியுடன் சேர்த்து, கார்த்திக் என்ற பெயரில் 3 பேரும், தேமுதிக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் அழகாபுரம் மோகன்ராஜ் உள்பட மோகன்ராஜ் என்ற பெயரில் இருவரும் போட்டியிடுகின்றனர்.

சேலம் தெற்கு தொகுதியில் திமுக வேட்பாளர் உள்பட லோகநாதன் என்ற பெயரில் 3 பேரும், தவெகவைச் சேர்ந்த தமிழன் பார்த்திபன் உள்பட பார்த்திபன் என்ற பெயரில் 3 பேரும், சேலம் வடக்கு தொகுதியில் திமுக வேட்பாளர் அமைச்சர் ரா. ராஜேந்திரன் உள்பட ராஜேந்திரன் என்ற பெயரில் 2 பேரும், ஓமலூர் தொகுதியில் மணி என்ற பெயரில் 2 பேரும் வேட்புமனு அளித்துள்ளனர்.

அதன்படி, ஏற்காடு தொகுதியில் பழனிசாமி என்ற பெயரில் 2 பேரும், வெங்கடேசன் என்ற பெயரில் 2 பேரும் போட்டியிடுகின்றனர். சங்ககிரி தொகுதியில் மணிகண்டன் என்ற பெயரில் திமுக வேட்பாளர் உள்பட 3 பேரும், செந்தில்குமார், சக்திவேல் ஆகிய பெயர்களில் தலா 2 பேரும் போட்டியிடு கின்றனர். மேட்டூர் தொகுதியில் கண்ணன் என்ற பெயரிலும், வெங்கடாசலம் என்ற பெயரிலும் தலா 2 பேர் களத்தில் உள்ளனர்.

அதேசமயம், கெங்கவல்லி, ஆத்தூர், எடப்பாடி, வீரபாண்டி தொகுதிகளில் வெவ்வேறு பெயரைக் கொண்டவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

# குமாரபாளையம் தொகுதி திமுக வேட்பாளர் சேர்மன் எஸ். பாலு வாக்காளர்களுக்கு வேண்டுகோள்..

## தொகுதியின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவேன். வாக்களிக்க வேண்டுகோள்..




பள்ளிபாளையம். ஏப்ரல். 17

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிடும் சேர்மன் பாலு தான் வெற்றி பெற்ற பின் குமாரபாளையம் தொகுதிக்கு தேவையான அடிப்படை தேவைகளை நிச்சயம் பூர்த்தி செய்வேன் என்று தனக்கு வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழக சட்டமன்ற பொது தேர்தல் இந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. தொடர்ந்து மாதமே நான்காம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

நிலையில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக போட்டியிடும் சேர்மன் எஸ் பாலு குமாரபாளையம் தொகுதி மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் கடந்த நான்கு தேர்தல்களில் வெற்றி பெற்ற வேட்பாளர் இரண்டு முறை அமைச்சராகவும் இரண்டு முறை எம்எல்ஏவாகவும் இருந்துள்ள நிலையில் குமாரபாளையம் தொகுதி மக்களுக்கான அடிப்படை தேவைகளை அவர் நிறைவேற்ற வில்லை.

அந்த அடிப்படையில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் குமாரபாளையம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்தால், அடுத்து அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் குமாரபாளையம் தொகுதிக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தருவேன் என நான் உறுதியளிப்பதோடு, தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு வேண்டுகோளும் வைக்கிறேன். என்று குமாரபாளையம் தொகுதி வாக்காளர்களுக்கு திமுக வேட்பாளர் சேர்மன் எஸ். பாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421